# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். **076/ந/2018**

ஆணை எண். **102/2018**

நாள் : **17/04/2018**

**திருமதி தொ. மாரி,**
**விருதுநகர்.**

– **முறையீட்டு மனுதாரர்**

நகராட்சி ஆணையர்,
விருதுநகர் நகராட்சி,
விருதுநகர்.

– **எதிர் மனுதாரர்**

விருதுநகர், புல்லக்கோட்டை சாலை, கதவு எண்.18/1, பரங்கிநாதபுரம் மேற்கு முகவரியில் வசிக்கும் திருமதி தொ. மாரி அவர்களின் முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 06.04.2018 அன்று பெறப்பட்டு, 076/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டுக் கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## <u>ஆணை</u>

விருதுநகர், புல்லக்கோட்டை சாலை, கதவு எண்.18/1, பரங்கிநாதபுரம் மேற்கு முகவரியில் வசிக்கும் திருமதி தொ. மாரி என்பவர், தான் விருதுநகர் நகராட்சியில் துப்புரவுப் பணியாளராகப் பணியாற்றி 30.06.2016 அன்று பணியியிலிருந்து ஓய்வு பெற்றதாகவும், தனது பணிக்காலத்தில் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதிக்கான வட்டித் தொகை மற்றும் 5–வது ஊதியக் குழு பரிந்துரையின் கீழ் வழங்கப்படவேண்டிய வட்டியுடன் கூடிய நிலுவைத் தொகையையும் வழங்கக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. நகராட்சி நிர்வாக ஆணையர் தனது 29.02.2008 நாளிட்ட சுற்றறிக்கை எண்.9019/எல்3/2008 மற்றும் 10.04.2008 நாளிட்ட சுற்றறிக்கை எண்.16729/எல்3/2008–இல், ஓய்வு பெற்ற நகராட்சிப் பணியாளர்களுக்கு, பணியின் போது பிடித்தம் செய்யப்பட்ட சேமநல நிதிக்கான வட்டித் தொகையினை வழங்குவது குறித்து மேற்கொள்ளப் பட்டவேண்டிய நடவடிக்கைக் குறித்த வழிகாட்டுதல்களை அறிவிக்கை செய்துள்ளார். எனவே, மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு, சேமநலநிதிக்கான வட்டித் தொகையினை வழங்கக்கோரும் மனுவினை உரிய ஆவணங்கள் மற்றும் தேவையான விவரங்களுடன் **விருதுநகர் நகராட்சி ஆணையருக்கு** மனுச் செய்யுமாறு முறையீட்டு மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

3. முறையீட்டு மனுதாரரிடமிருந்து பெறப்படும் / பெறப்பட்ட மனுவினை உரிய ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலனை செய்து, அவரது பணி விவரங்களை உறுதி செய்து உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை இயக்குநரின் ஒப்புதலைப் பெற்று சேமநலநிதிக்கான வட்டித் தொகையினை வழங்கவும் மற்றும் 5–வது ஊதியக் குழுவின் பரிந்துரையின் கீழ் மனுதாரருக்கு நிலுவைத் தொகை வழங்கப்படவேண்டியிருப்பின், அந்நிலுவைத் தொகை மற்றும் அதற்கான வட்டித் தொகையினை உரிய ஆணைகளின் கீழ் வழங்குவதற்கான நடவடிக்கையினை விரைந்து மேற்கொள்ளும்படி **விருதுநகர் நகராட்சி ஆணையருக்கு** அறிவுறுத்தியும் இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

**2018–ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 17–**ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர். 18/4/18

பெறுநர்

1. திருமதி கோ. மாரி,
கதவு எண்.18/1, பரங்கிநாதபுரம் மேற்கு,
புல்லக்கோட்டை ரோடு,
**விருதுநகர் – 626 001.**

2. **நகராட்சி ஆணையர்,**
**விருதுநகர் நகராட்சி,**
**விருதுநகர் –626 001.**

3. **நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர்,**
**நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம்,**
**திருநெல்வேலி, திருநெல்வேலி மாவட்டம்.**

4. **நகராட்சி நிர்வாக ஆணையர்,**
**நகராட்சி நிர்வாக ஆணையரகம்,**
**சேப்பாக்கம், சென்னை – 600 005.**

**நகல் :** **முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்**
**பிரிவு அலுவலர் (நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு – 3**
**இ.கோ. / உதிரி**